




ஓலை 133| ஓசை 256| ஆகஸ்ட் 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



இரா. இராகவனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**அன்பின் வழியது உயிர்நிலை அ:.திலார்க்கு**
**என்புதோல் போர்த்த உடம்பு**

## பொருள்

**அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்: அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும்**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


**அகர முதல இலக்கியப் பேரவை**


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நூன்முறை தெளிந்து சீலத் தொழுகு!

## பாவகை : வழிநடைச் சிந்து




தேவநேயர் நூலகம் பாரடி - அதில்
        தேர்ந்தறிவு நூல்படிடி
        திசைதோறும் நீஓங்கடி;
ஆவதெல்லாம் அறிஞர் அண்ணா - நூலகம்
        அங்கேதான் நீபாரடி
        அறிவேற நூல்படிடி!

**இலக்கணக் குறிப்பு:**

வழிப் பயணம் போகும்போது ஒருவன் ஒருத்திக்குக் காணும் காட்சிகளைப் பாடலாகப் பாடி உணர்த்தி நடப்பதுவே வழிநடைச் சிந்தாகும். மேலே உள்ள பாடல், முதலடி மூன்று சீர்கள் வந்து, தனிச்சொல் வந்து இரண்டாமடி நான்கு சீர்கள் மடக்கி வரும் முந்நாற் சீரிரட்டை ஆகும்.

## பாவகை : வழிநடைச் சிந்து




வீடுகள் தெருக்கள் நாட்டில் பெரும்
        வியன்மிகு நூல்கள் வேண்டும் ஏட்டில்;
காடுகள் தம்மிலும் நாட்டில் - போல்
        கனிந்தே நூலகம் பரப்பிடு ஏட்டில்!

**இலக்கணக் குறிப்பு:**

இது முதலடி மூன்று சீர், தனிச்சீர் வந்து, பின்னடி நான்கு சீர்கள் இரண்டு முறை வருதலால், முந்நாற் சீரிரட்டை ஆகும். ஒவ்வோரடியின் இறுதிச்சீர் சந்த ஓசையாக வரும்.

பாவகை : மண்டில வெண்பா

வாழும் மனிதனின் வாட்டம் அகற்றவே
தாழும் நிலையில் தளர்ந்தோர் நிலைமையைப்
பாழ்நிலை வாழ்வோர் பணத்துடன் உய்யவே
இழுமென் னருவியாய் ஈந்தே மகிழ்.

உழைப்பவர் தம்மை உயரத்தில் வைக்க
அழைத்திடல் வேண்டுமே அன்பாய் பசிக்காய்ப்
பழையதைத் தின்றிடும் பாமரர் தம்மைப்
பழைமை யகற்றியே பண்புடன் உயர்த்து.



கவிஞர் செ. கலைவாணி

# ஈகை எந்நிலையிலும்

வலி கண்ட நெஞ்சம் தான் வழிதுணைக்கு வருமே
வாழ்விற்கு புதுபொருளை வழங்கிடவே வருமே
அலைமோதும் எண்ணங்கள் அடிமனதில் எழுமே
ஆனாலும் அன்பினையே அள்ளியள்ளி தருமே
மலைபோல பாரங்கள் மனதிற்குள் கிடந்தும்
மறுக்காமல் இயன்றவரை மலர்ந்திடவும் துடிக்கும்
விலையில்லா பேரன்பு விழுதாகி நிற்கும்
விழுந்தாலும் எழுகின்ற வித்தைகளைக் கற்கும்

கொடைதந்த கைகளுக்கு கொண்டாட்டம் வேண்டாம்
கொடுத்துதவ நினைத்துவிட்டால் குடிவுயரும் தானாய்
அடைக்காக்கும் செல்வங்கள் அற்பங்கள் தானே
அடுத்தவர்க்கு போகாமல் அழிந்திடுமே வீணே
விடைதேடும் வாழ்விற்கு வினையாற்றும் ஈகை
விடிவுதரும் பரிதியாக விரித்திடுமே தோகை
முடக்கங்கள் முடக்கினாலும் முன்னேற்றம் காணும்
முனைப்போடு வாழ்வோர்க்கே முகிழ்ந்திடுமே வாழ்வும்



கவிஞர் பூர்ணிமா சங்கர்

# யாராலும் அறியப்படாத

யாராலும் அறியப்படாத
ஒரு பூ
இவ்வுலகில் ஏதோ
ஒரு மூலையில்
தன்னுடைய இதழ்களை
விரித்துக் கொண்டுதான்
இருக்கிறது.

யாராலும் அறியப்படாத
ஒரு பூச்சியினம்
எங்கோ ஓரிடத்தில்
வாழ்ந்து கொண்டுதான்
இருக்கிறது

யாராலும் அறியப்படாத
ஒரு மரம்
தன் கிளைகளில்
புதிய இலைகளைப்
பெற்றெடுத்துக் கொண்டுதான்
இருக்கிறது

ஏன்!
யாராலும் அறியப்படாத
ஒரு கவிஞன்
தன் பயணத்தில்
இயங்கிக் கொண்டுதான்
இருக்கிறான்



கவிஞர் மதுரகவி, வண்டியூர் (மதுரை)

# வேண்டுதல்



என்னுடன்
பூப்பறிக்கிறது
பிஞ்சுவிரல் கரமொன்று.
நான் எவ்வளவு
நேர்த்தியுடன் பூப்பறித்தும்
அந்தப் பிஞ்சுவிரல்களின்
மென்மைக்கு இணையாய்
என்னால்
பூப்பறிக்க இயவில்லை.
தென்றலாய்த் தவழ்ந்து வந்த
மற்றொரு
பட்டாம்பூச்சிக்கரமொன்று
அதனினும் இன்னும்
மென்மையாய்ப்
பறிக்கிறது பூக்களை.
என் கரங்களும்
பிஞ்சு விரல்களைக்
கொண்டிருந்த காலங்களில்
இப்படி
மென்மையாகத்தான்
பூக்களைப் பறித்திருக்கும்.
இந்தப் பரபரப்பும் அவசரமும்
என் விரல்களில்
புகுந்தது போல்
இனிவரும் காலம்
இந்தப் பிஞ்சு
விரல்களுக்குள்
புகுந்திடக்கூடாதென்பதே
எனது பிரார்த்தனையும்
வேண்டுகோளும்!

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# பிரிவு ஆற்றாமை

அதிகாரம் : 116



பொருள்தேடச் சென்று
விரைந்துவருவேன் என்று.
கூறுகையில் தலைவி
உயிரோ டிருந்திலளே.

இணைந்துவாழ இயைந்திடுகையில்
பிரிவான் தலைவனென.
நினையும்போதே தலைவிக்கு
அச்சம் உண்டாகுமே.

தலைவன் காரணத்தோடே
பிரிந்துபோதல் நிஜமேயாக.
பிரியேன் என்றுரைத்தால்
நம்பிடாள் தலைவியே.

பிரிந்திடேன் என்றுரைத்தவன்
வாக்குமறந்து பிரிந்திடின்.
உரைநம்பிய தலைவிமேல்
குற்றமுண்டோ? இல்லையே.

தலைவன் பிரிந்துசெல்வதை
தடுத்து நிறுத்துங்கள்.
திரும்பவந்து காதல்தருவான்
என்பது வீணாசையே.

தலைவியைப் பிரியத்துணிந்தான்
இரக்கமில்லா தலைவன்.
விலையில்லா காதலுக்காய்
உருகியிருத்தல் வீணே.

தலைவனின் பிரிவை
தலைவியின் கரத்தினின்று.
கழன்று தரைவீழும்
வளைமூலம் ஊரறியுமே.

தோழியர் இல்லாதிருத்தல்
பெண்ணுக்கு துன்பமாமதனிலும்.
பெருந்துன்பம் தருமாம்
தலைவனைப் பிரிந்திருத்தலே.

நெருப்பு தீண்டிடச்சுடுமாயினும்
பிரிந்தாலே சுட்டெரிக்கும்.
காதல்நோய்போல் நெருப்புக்கு
வல்லமை உண்டோ?

பிரிவுத்துன்பத்தை சகித்தும்
நீக்கிவாழும் மகளிருண்டே.
பிரிவுக்குடன்பட்டால் நானோ
உயிர் வாழமாட்டேனே!

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# விடுதலை

கருவின் விடுதலை ஜனனம் எனப்படும்!
உயிரின் விடுதலை மரணம் எனப்படும்!

இரவில் மறைந்த சூரியனின் விடுதலை -
விடியற்காலை வசப்படும்!
தேய்ந்து போகும் சந்திரனின் விடுதலை -
அமாவாசை எனப்படும்!

அணையில் அகப்பட்ட ஆற்றின் விடுதலை -
மதகு திறக்கும் வேளை!
ஒடிக் களைத்த நீருக்கு விடுதலை -
மலைமுகட்டில் அருவியாய்!

ஏழ்மை சட்டைகளுக்கு விடுதலை -
தீபாவளி காலை!

கணவர்களுக்கு விடுதலை -
மனைவியர் அம்மா வீட்டில் !
மனைவியர்க்கு விடுதலை -
கணவர்களுக்கு சபரிமலை மாலை !

மாணவர்க்கு விடுதலை -பள்ளி ஆண்டு விடுமுறை !
அடைபட்ட கடல்நீரின் விடுதலை வான் மேகமாய் !
அலையும் முகிலுக்கு விடுதலை வானத்து மழையாய் !

பெண் விடுதலை பேசுவதற்காக அல்ல -
செயல்படுத்துவதற்காக !

புத்தகம் சுமக்கும் வயதில்வாழ்வின் சுமையா;
குழந்தைத் தொழிலாளர் விடுதலை மானுடக் கடமை -
உறுதி செய்வீரா?



கவிஞர் ஆ. சி. கந்தன், திருவொற்றியூர் (சென்னை)

# பயணம்

ரயில் பயணத்தில்
தன் கைக்குழந்தையை
என்னவளிடம்
கையில் கொடுத்துவிட்டு
அவசரத்திற்கு
கழிவறை சென்றிருந்தாள்
எதிரில் அமர்ந்திருந்த
பெண்ணொருத்தி.

வயிற்றில்
ஒரு புழுபூச்சி கூட இல்லையா?
சமூகம் கேட்கும் கேள்விக்கு
விடை தேடிக்கொண்டிருந்தவள்
என்னை நோக்கிய
அவளின் பார்வை.
கவனிக்க நேர்ந்தது
விழியோரத்தில்
ஊஞ்சலாடிக்கொண்டிருந்த
ஓர் நீர்த்துளி
கைக்குழந்தையின் கன்னத்தில் விழ.
ஆட்காட்டிவிரலை பிடித்து சப்பி அழுகை நிறுத்தியது

மேல் தளத்து படுக்கையில் உறங்குபவரின்
அலைபேசி பாடல் ஒன்று

தொடர் வண்டியின் இரைச்சலினிடையே.
என் மனதை தாலாட்டிக் கொண்டிடிருந்தது.



கவிஞர் சாயிராம்

# நனைந்த நெஞ்சம்

தேவதை கையிலிருந்து
விழுந்த கைக்குட்டை
வியர்வை துடைத்த நிலம்.

வானவில் ஓவியம் பார்த்த
வண்ணப்பூக்கள் வெட்கி
தலை சாய்ந்தது.

அலை நனைத்த கரை போல்
அவள் கடக்க நனைந்த நெஞ்சம்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# உதிரா மலரே குறையா மணமே

மெல்லியப் பூவினமே
மெல்லிடைத் தேன்கனியே
மென்மையானப் பூங்காற்றாய்
மெதுவாய்த் தழுவிடு

மெதுவாய் உரைத்திடு
மெல்லவே வந்திடு
மெய்யுரைத்து அன்பால்
மெய்ப்பொருள் காண்போம்



உதிரா மலரே
குறையா மணமே
உள்ளத்தின் நினைவுகளில்
உறைந்திட்ட உறவே

உயிராய் நினைத்தே
உணர்வினில் கலந்தேனே
உதயகாலப் பூபாளத்தின்
ஓசையாய் வந்துவிடு

உடுக்கை இடையழகில்
உறக்கத்தைத் தொலைத்தேனே
உதிரத்தில் உற்சாகம்
உன்னைக் கண்டதுமே

உருகுகிறேன் நித்தமும்
உன்னை எண்ணியே
உருவமில்லாத காதலில்
உன்மத்தம் ஆனேனே

உரிமை கொண்டு
உரியவளாய் ஆகிவிடு
இனித்திடும் இல்லறத்தில்
இணைந்தே பயணிப்போம்

இதயமும் இதமாகிட
இனிமையும் சேர்ந்திடுமே
வானத்து வெண்ணிலவே
வாழ்ந்திடலாம் வாராயோ

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வாசிப்பு

வாசிப்பு என்னும் வசந்தம்
அலைபேசியின் அறிமுகத்தில்
இன்று இலையுதிர் காலங்களாய்

புத்தகத்தை மேயாத கண்கள்
கைப்பேசியின் கரங்களில்
ஆறாத புண்களாய்

ஆனாலும் நூலகத்தின் உள்ளே
வாசிப்பின் மூச்சுக்காற்று
இன்றும் தென்றலாய்

புத்தக புழுக்கள் எல்லாம்
புன்னகைக்கும் புத்தர்களாய்
நூலகம் என்னும் போதிமரத்தில்

ஆத்திகமும் நாத்திகமும்
வாசிப்பின் வாசலில்
இணைபிரியா தோழமைகளாய்

வாசிப்பவர்கள் கல்லாமையின்
வறுமையை தின்று அறிவின்
அடையாளங்களாய்

வாசிக்க தெரிந்தவர்கள் மட்டுமே
வாழ்க்கை பக்கங்களின் கிழியாத
தொடர் கதைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# கண்டுணர்க காலமெலாம்

நதியின் வளைதலே
நமக்கான ரசனையை
நாளும் எடுத்துரைக்க
மேடு பள்ளங்கள் கடந்தே
பாறைகளை அழகாக்கிட
உயரமும் தூரமும்
பொங்கிடும் உணர்வை விதைக்க
சமதளத்தை மட்டுமே நம்பியில்லை
நதியின் வாழ்வு.
விரியும் மொட்டுக்குள்
அறியா வண்ணங்கள்
வளம் பெறும் நாளின் முடிவில்
விடைபெறும் வேளை நெருங்க
இதழ்களெங்கும் பரவிடும் மணமும்
மலர்ந்திடும் புன்னகையுமென
செடியைச் சிறப்பிக்கும்
மலர்கள் அறிவதில்லை
மாயையென்ற அரும்பொருளை.
உறைவீச்சில் உறங்காமல்
அலைபேச்சில் தயங்காமல்
உள்ளுக்குள் புதையல்கள்
ஒளித்தே வைத்தாலும்
தேடலின் தீவிரத்தை
திசையெங்கும் நீட்டித்தே
எண்ணிலா உயிர்களுக்கு
அடைக்கலமாய் தனை ஈன்று
எல்லை எதுவென்றே
அறியவொண்ணா மயக்கத்தில்
ஆறறிவை கரை பார்க்க வைத்து
உலகத்தை சுமக்கின்ற
சமுத்திரத்தின் பேரமைதி.
வானளக்கும் உயரத்தை
வகைபிரிக்க முடியாமல்
தேனளக்கும் மரங்கள் தாங்கி
பாடும் பறவைகளும்
கூடும் கோடி வகை விலங்குகளும்
கும்மாள வாழ்வினிலே
குதியாட்டம் போட்டிடவே
உறைவிடமாய் தனைக் கொடுத்தும்
உணவுநிறை செல்வமெலாம்
இல்லையென்காது ஈந்து ஈந்து
சூழலுக்குப் போர்வையாகி
சொர்க்கத்தை தூது விட்டு
வாடாத வசந்தத்தை
வழியெங்கும் விதைக்கின்ற
இயற்கையின் தாலாட்டு.
உணர்வுக்குள் நமக்குக் கீழாய்
உணர்த்துவதில் நமக்கும் மேலாய்
பாதை விரித்திங்கே பலப்பல
காட்டுகையில்
பேதையெனப் பிறழ்ந்தே
பெருந்துன்பத்தை அடைகாக்கும்
மானிடனே நில்.
அறிவை எண்ணிடாது
அஃறிணையெல்லாம்
அகம் நிறைக்க
அளித்திடும் செல்வங்களை
அலசிப்பார்த்தாலே
ஆயுளுக்கும் பாரமில்லை
ஆனந்தம் நிலைத்திடவே.

கவிஞர் இளையவன் சிவா

# கண்ணீர்

காலங்கள் கடந்து கொண்டே போகின்றன
விமர்சனங்கள் அதிகரிக்க தொடங்கி விட்டது
ஏமாற்றங்களின் முடிவு காயப்படுத்துகிறது
அழுதும் தீர்க்க முடியாத உள்ள நிலையில்
இதுவும் மாறும் என்ற நினைப்பை
மனதில் கொண்டு மற்றவர்களின் பார்வைக்கு
இன்பமாய் இருப்பது போல் நடித்து காட்டி
வீழ்வதே இங்கு பலரின் வாழ்க்கை
எல்லா தடைகளையும் எதிர்க்க முற்பட்டால்
வாழும் நாட்கள் சுலபமே
எதை பற்றியும் கவலைப்படாதே
உனக்கு சரி என்று
தோன்றுவதை தாமதமின்றி நடத்தி காட்டு
இதுவே உனதான இலட்சியம்.



கவிஞர் மோனிஷா

# காத்திருப்பு



கனியாத பழம் கூட ருசியாது என்பது போல
காத்திருக்காத காதல் கூட கவி பாடாது

பத்து மாதம் சுமந்தால் தான்
உன் காதல் சின்னம் கண் பார்க்கும்
அவசரம் கொண்டால் அழிந்தள்ளவா போகும்.
இதிலும் காத்திருப்பு அழகே கண்ணம்மா!

கொஞ்சல் மொழி பேசும்
கிள்ளையின் சங்கீதம் கூட
காத்திருப்பின் வெளிப்பாடே கண்ணம்மா!

முழுநிலவு பார்க்க வேண்டும் என்றாலும்
சிறுகாலம் காத்திருக்க தான் வேண்டும்
என்பதை மறந்தாயோ?
கண்ணுக்கு இடும் மை கூட
கண்ணோடு ஒட்டிகொள்ள
காலம் கொடுக்க வேண்டுமடி கண்ணம்மா!

விண்ணில் இருந்து மண்ணிற்கு வரும்
மழை துளி கூட காத்திருப்பின் காவியமே!
காத்திரு காலம் பதில் சொல்லும் என்று காத்திரு
காத்திருப்பும் காவியம் ஆகும்
ஆசையோடு காத்திரு கண்ணம்மா

கவிஞர் என். ரிஷானா, ஓட்டமாவடி (கிழக்கிலங்கை)

# கைப்பேசியின் கைங்கரியம்




காலையில் எழுந்ததும்
கண்விழிப்பது இதனுள்.
கைக்குள் அடங்கி விட
கடமைகளும் மறக்கிறது.

நாளையும் பொழுதையும்
நயமாகத் தின்று.
நலமான வாழ்வை
நாசமாக்கி மகிழ்கிறது.

வேலைகள் குவிந்து
மூளையை எச்சரிக்க.
பாழான இதற்குள்
காலம் கரைகின்றது.

தேவைக்கு மட்டுமன்றி
நிதமுமே தேவையாக்கும்.
மேதையாகவே இன்று
மேம்பட்டு நிற்கிறது.

உறவுகளுக்குள் விரிசலை
உணர்வின்றிப் பிரித்து.
மரத்துப்போன வாழ்வுக்கு
வித்திட்டுச் செல்கிறது.

பக்கத்தில் நடப்பதை
பகுத்தறிய முடியாது.
திக்கற்றுத் திணறியே
திசைமாறச் செய்கிறது.

கைகள் வலித்து
கண்ணிரண்டும் பூத்திடினும்.
மனதை ஆட்கொண்டு
வாட்டி எடுக்கின்றது.

பயன்கள் பலதை
பக்குவமாய்த் தந்தாலும்.
விரிந்திடும் தீமைகள்
விண்ணையே முட்டிடும்.

சிறுவர்கள் வாழ்வை
சின்னாபின்னமாக்கி.
சிந்தைக்குள் தீயதையும்
திணித்துக் கொண்டிருக்கிறது.

அளவோடு நிதானித்து
அறிவுக்குப் பயன்படுத்தினால்
அகிலத்தில் நாட்களும்
அழகாய்க் கழிந்திடும்.

கவிஞர் மாஹிரா ஹமீட் அஸ்ஹர், துபாய்

# நிழலாய் நீங்கிய நெருக்கம்



மின்னலும் இடியும் கொஞ்சிக் குழாவும்,
மழையில் எழுதப்பட்ட இந்தக் கடிதத்தின்
ஒவ்வொரு சொற்களும் கண்ணீரால் ஆனவை.

சொல்லத் தயங்கிய நேச உணர்வுகளை
சொற்களாய் செதுக்கி
மழைபோல் தூவி விட்டிருக்கிறது
இக்கடித உறைக்குள் சில நினைவுகள்

விழி பார்த்து சொல்ல வழியில்லா
விட்டுக்கொடுப்பில் விலகிய
இரு உயிர்களின் உறைந்து போன கனவுகளும்

அளவின்றி நேசித்து, மௌனமாய்
விலகிக்கொண்ட இரு
உயிர்களின் எழுதாத
நேசத்தின் தடங்களும்

ஆசைகளை தங்களுக்குள்ளே புதைத்து
வெவ்வேறு பாதையில் பயணிக்கும்
அவ்வுயிர்களின் சந்தரப்ப சூழ்நிலைகளும்

நேராய் சந்திக்காத விழிகள் கலங்கித் தவித்ததில்
இதயம் உணரும் உணர்வுகளையும்
சுமக்கிறது இக்கடிதம்

பாதைகள் பிரிந்திருந்தாலும் ஒரு நொடியாவது
அவர்களின் எண்ணங்கள் ஏதாவொரு வடிவில்
சந்தித்துக் கொண்டு தானிருக்கின்றன

கவிஞர் ரஸீனா ரமீஸான் நீரல்லை, அக்குறணை

# கண்ணாடி (மனைவி)



நான் படுக்கையிலிருந்து எழுந்தேன்
அவளோ அடுப்பபடியில்
சண்டையிட்டுக் கொண்டிருந்தாள்.
நான் காலை கடன்களை முடிக்க சென்றேன்
அவளோ பாத்திரங்களை பத்திரப்படுத்தினாள்.
நான் செய்தித் தாளை ஆராய்ந்தேன்
அவளோ வீட்டின் குப்பைகளிடம்
முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

நான் உடலை சுத்தம் செய்தேன்
அவளோ ஆடைகளின் அழுக்குகளிடம்
போராட்டம் செய்து கொண்டிருந்தாள்.
என் பசியை போக்க வயிற்றை
சமாதானம் செய்தேன் அவளோ
அன்னமிடம் அன்பு காட்டிக் கொண்டிருந்தாள்.
மணியாகி விட்டதென்று அலுவலகம் கிளம்பினேன்
அவளோ என் வருகைக்காக
பிள்ளையுடன் நின்று கொண்டிருந்தாள்.

நான் இரவு வீடு திரும்பினேன்
ஆனால் அவளோ இன்னும் திரும்பவில்லை
சமயலறையை விட்டு.
நான் வேலை அழுப்பில் உறங்க சென்றேன்
அவளோ படுக்கையை சரி செய்து கொண்டிருந்தாள்.
நான் கண்களை மூட அவளோ கதவின் தாழ்பாள்கள்
அவளை அழைக்க எரியும் விளக்குகள் கூச்சலிட
அனைத்தும் சரி செய்து படுக்கையில் விழுந்தாள்.

இருண்டு கிடந்த என் வாழ்வில் வெளிச்சம் போல்
வந்த வாழ்க்கை துணையே.
என்ன வேலை செய்கிறாய் என்று
என்னிடம் கேட்பவர்களிடம் பதில் கூற
சற்று தயக்கமாகவே இருக்கிறது எனக்கு.
உன் ஒற்றை பார்வை சொல்லும்,
வேலைகளால் கழிந்த உன் பொழுதுகளை,

யாரேனும் உன்னிடம் வேலைக்கு செல்கிறாயா
என்று கேட்டால் குழந்தைத் தனமான அவளின் பதில்,

"இல்லைங்க நான் வீட்டில் சும்மா தான் இருக்கிறேன்"
அவர்களுக்கு எப்படி தெரியும்
இங்கு யார் வேலைக்காரர்கள் என்று!

கவிஞர் ர. ரமேஷ், திருப்பூர்

# தீயிட்டு

துடிதுடித்து மண்ணில்
விழும் ஈசலாகிறது
நீ கைவிட்ட
இதயம்
முன்னொரு பொழுதில்
பறந்து
வானமளந்த கதையைத்
தனக்குள் தீயிட்டுக் கொள்(ல்)கிறது!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# முடிவில்லா பாசம்

தாயின் விழியில் தூங்கும் நிலா
தந்தையின் நிழலில் தூங்கும் பசுமை

குளிர் விடியலின் முதற்காற்று போல
பாசத்தின் தொடக்கம் அவர்களே

ஓர் பார்வை போதும், உயிர் அமைதிக்கும்
ஓர் சொல்லும் கூடாது, அவர்கள் வலி மறைக்க

உணவு விடினும் பசிக்காதென்று சொன்னோம்
அவர்கள் உயிர் ஈந்தனர், அதை உணராமலே

அடிக்கடி மழை வருவதைப் போலவே
அவர்கள் கவலை நம் மேல் கவிகிறது

ஏற்றத்தில் மெல்ல நின்ற போது
ஓர் புன்னகையிலே அவர்களை மறந்தோம்

வாழ்க்கையின் எல்லை நமக்கே தெரிந்தாலும்
அவர்களின் பாசத்திற்கெல்லை இல்லை

மாற்றிக்கொள்ளும் எல்லா உறவுகளிலும்
மாற்றமில்லா உறவு, பெற்றோர்கள் தான்

தொலைவில் போனாலும் அருகில்தான் அவர்கள்
பெருமூச்சாகவே நம்மை வாழ வைத்தவர்கள்



கவிஞர் திருமதி சினேஹா வினை, சென்னை

தூரிகை கொண்டு தீட்டிவிட முடியுமா என்ன
அவர்கள் அனுதினமும் அனுபவிக்கும் கஷ்டங்களை.

முள் மேல் சிக்கிய சேலையாய்
தினம் தினம் அவஸ்த்தைப்படும்
உணர்வுகளை விழுங்கவும் முடியாமல்
துப்பவும் முடியாமல் கடத்தும்
காலங்களை எண்ணத் தானே வேண்டும்.



அவர்கள் அல்லற்பட்டு அவமானப்பட்ட
நாழிகைகள் எல்லாமே நள்ளிரவில்தான்
விழாக்கால விளக்குகளாய்
விழிகளில் ஒளி உமிழ்கின்றன.

வெய்யோனின் நிழலில் மட்டும்
வாய் விட்டுச் சிரிக்கும் விதியானது;
கும்மிருட்டில் மட்டும்
சுவரருகே ஓர் முடுக்கில்
தலையணையில் முகம் புதைத்து அழுகிறது.

கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி, கிழக்கிலங்கை

# இயற்கைக்கு அரணாய் இரு

மண்ணில் வாழும் மனிதர்களே வாருங்கள்
விண்ணளவு மரங்களை வளர்த்துப் பாருங்கள்
அழைத்திடும் விண்ணில் உள்ள மழைமுகிலை
மழைத்துளி மகிழ்ந்து மண்ணில் இறங்கும்
மரம் வளர்ப்போம் வரம் பெறுவோம்
தரம் உயர்த்தவே கரம் கோர்ப்போம்
மரங்களும் வளங்களும் இயற்கையின் சீதனங்கள்
தரங்கெடுக்கும் செயல்களால் செய்யாதீர் உதாசீனம்
இயற்கைக்கு என்றும் அரணாய் இருப்போம்
செயற்கை. மோகத்தால் முரண்பாடு செய்யற்க
இயற்கையை அழித்து இன்னல் கொள்ளாதே
செயற்கையாய் பொழிந்து வானமும் வழியாதே
பூமிப்பந்தை உடைப்பதற்கு யார்தந்தார் உரிமை?
சாமியாய் போற்றிக் காப்பதே கடமை
காடுதனை அழித்தால் வானம் பொழியாது
வீடுகளில் வேள்வி செய்தாலும் நீர்வழியாது!
வெள்ளம் வருகுது புவிதனில் ஒருபக்கம்
வேளாண்மை கருகுது இங்கே மறுபக்கம்
புவியை வெப்பம் ஆக்கிப் பார்க்காதே/
அவிந்து நீயும் தணலில் வேகாதே
பறவை இனங்கள் பாடிடும் கச்சேரி
சிறையில் வைத்தால் நன்றல்ல எச்சரி
குளிர் சாதன அறையில் உறங்காதே
தளிர்க்கன்று நட்டு வைக்க மறக்காதே,



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# பூமியின் புன்னகை



பூமியின் புன்னகை
பொன்னெழில் பூக்களே!
பூக்களைத் தேடுது
பாவலர் பாக்களே!
எமர்சன் சொன்னதும்
இதைத்தானே அன்றே!
எங்கே பூக்கள்
காணோமே இன்றே!
***

பூமியின் சிரிப்பை
மலர்ந்த மலர்களில்
பாரெங்கும் இன்றும்
காணவே ஆசையே!
சாமியா வந்து
பூந்தோட்டம் அழித்தது?
சரித்திர மனிதனே
அறியாமையே அழிக்குதே!
***

நந்தவனம் இழந்தோம்
நறுமலர்கள் இழந்தோம்!
நொந்துபோய் இன்று
நோய்வந்து சாகிறோம்!
சிந்தனை இல்லாமல்
சுகந்தம் வீசுமா?
சுகந்தம் இல்லாமல்
சீவியம் சிறக்குமா?
***

காடுகளை அழித்துக்
கங்கைகளை வறளவைத்தோம்
கேடுகெட்ட அறிவீனத்தால்
கடும் கனலில் வேகுகிறோம்
கூடுவிட்டு உயிரது
கரைசேர முன்னே
பாடுபட்டு பயிர்பச்சை
இனி வளர்ப்போமே!
***

பொன்னான பூமிக்கு
பூந்தோட்டங்களே வேண்டுமே
பூமியின் சிரிப்போ
அப்போதுதானே தொடருமே
சாமியை அழைப்போமே
பூமியைக் காக்க!
சரித்திர மனிதனே புறப்படு
பூந்தோட்டம் அமைக்க!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (சரவணமுத்து நவேந்திரன்), ஈழ(ம்) வளநாடு



அதிகரிக்கும் பேச்சுக்கள்
ஆரம்பத்தில் இன்பம்
தொடர்ந்து சென்றிட
வாழ்நாள் துன்பம்

நாவு புரட்டும் மனிதனுக்கு
நோகடிப்பது கலை
தனியாகத் தள்ளி நின்றாலும்
பார்வை தெளிப்பான்

அதிகாரமுள்ள பெண்
எதையும் சாதிப்பாள்
அமைதியானவள் அடக்கியே
நொந்து சாவாள்

மழலையின் சிரிப்பு
பலதையும் சொல்லும்
மயங்கி விட்டால்
நினைத்ததை சாதிக்கும்

கண்டுகொள்ளாத புகழ்ச்சி
நினைக்காமல் உயர்த்தும்
பெருமைக்காய் தேடுவது
முகவரியையும் தொலைக்கும்

வீட்டுக்காரிக்கு விடுதலை
வெளியே கூட்டிசெல்வதுதான்
கேட்கும்போது துரிதமாய்
நடந்திட்டால் நன்மையே

அலைந்து திரிந்தால்
அவதூறுகள் பரவும்
தன்பாட்டில் நடந்தால்
தன்மானமும் உயரும்

மனைவியின் சமையலைப் புகழ்வதால்
இல்லறம் இனிக்கும்
குறை கூறுவது தொடர்ந்தால்
இருப்பதும் இல்லமலாகும்

சாட்டுச் சொல்வது
சோம்பேறித்தனத்தின் அடையாளம்
வழமையாகிப் போவது
ஆளுமைக்கு ஆபத்து

வியர்வையுடன் விவசாயி
கரங்களை நீட்டுகிறான்
வேலை வாங்கியவன்
முகத்தை சுழிக்கின்றான்

வேலை இல்லாத பெண்களுக்கு
வட்ட மேசை காத்திருக்கும்
முடியும் மகா நாட்டில்
மூன்று பேர் பேசவில்லை


கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

# காதலும் கழுத்தருப்பும்

கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் என்று
காற்றோடு இசைப்படி எதிரே நின்றவனை
கண் இமையாய் போல் நானிருப்பேன்
என தன் அன்பால் அரவனைத்தவள்
காதல் உலகத்தில் காற்றில் மிதந்தார்கள்
இருவரின் தேடலில் நாட்களும் நகர்கிறது
காதலின் பிணைப்பில் பரிசுகள் பரிமாற்றம்
கண்ணே மணியே கவியே என் உயிரே என்றவள்
சில கணம் நின்றபொழுது -அவர்கள் அருகே
ஈன்றவனும் உடன்பிறந்தவனும் வருவதைக்கண்டு
கைபற்றியவனை கள்வன் என்கிறாள்
அவனோ ஒரு மணித்துளி திகைத்துவிட்டான்
உள்ளத்தை கொள்ளை கொண்டவனா
உடைமையை கொள்ளை கொண்டவனா என
அவன் என்னுவதற்குள் பாய்ந்து விட்டது
பேனாவை முனையைவிட கூர்மை தீட்டி வைத்திருந்த
வன்மம் ஆணவம் நிறைந்த கூரிய அரிவாள்
தூண்டிவிட்டவள் அவள்
துடிதுடித்து சாய்கிறான் அவன்
சாய்த்துவிட்டு செல்கிறான் ஆணவம் நிறைந்தவன்
இறுதியில் சாட்சி சொல்கிறது
இருவரும் முன்பு இணைந்து
எடுத்துக்கொண்ட புகைப்படங்கள்



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# சிவசக்தி

முத்திரியும் ஒருமித்து
எழில் தழல் எழும்பும்;

நாத சம்மியத்தின்
நாதமது எதிரொலிக்கும்;

ஒத்தே ஒருங்கி
ஒரு ஆனந்த நடனம்; காணபீர்!

எதிரொளிப்பர்
சம்புவும் சாம்பவியும் உச்சியில்

அமுத தாரை முடிவிலி
முடிக்கும்

குண்டலினியவள்
இனிதே எழும்ப



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# துரோகம்

முகமூடிப் பூக்கள்
முல்லை விரிப்புகள்.

இனிக்கப் பேசும்
இதயத்தின் ஆலாகாலம்.

கூடா நட்பாய்
புலப்படாத மாயம்.

மனசாட்சியை விற்று
மானிடம் பேசுவதே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# புதுமைப் பொழுது

ஒவ்வொரு நாளின் புது விடியலில்
கற்றுக் கொடுக்கும் பகல் நாழிகையில்
மிச்சப்படுத்திய எச்சங்களை
சற்றுத் தள்ளி வைக்கையில்
பிடிவாதமாய் மறுக்கிறது மனம்

மேகமெல்லாம் திரளும்பொழுது
சூரியன் எங்கோ ஒளிகிறது.
கண்ணில் தெரியாக் காற்றும் கூட
கலந்தே வருகிறது பல வாசத்தோடு
சிற்றிதழ் விரிக்கும் மலர்களெல்லாம்
பட்டாம்பூச்சியின் இறகுகளா.

தொலைதூர மரத்தில்
ஒற்றைக் குருவியொன்று
உற்று நோக்கும் பார்வையின் விதம்
விசித்திரம் படைத்த உலகை
சற்றே விலக்கிப் பார்த்த புதுமை

மழைச் சாரலோடு மேகம்
தென்றலின் தழுவலில் தூவானம்
ஆகாயம் நோக்கிப் பார்க்கிறேன்
சிறகை விரித்துப் பரந்த குருவி
உதிர்த்து விட்ட எச்சத்தில்
மீண்டும் முளைக்கலாம் ஒருமரம்
நாளையொருநாள் நந்தவனமாகலாம்

மனமெல்லாம் புதுமையாக
இப்பொழுதில் கடக்கிறேன்
மேகமாய்.. மழையாய்.. நதியாய்..



கவிஞர் மு செந்தூர்கனி, முத்துகிருஷ்ணாபுரம் (தென்திருப்பேரை)

# சாந்துப்பொட்டுக்காரி சலசலக்கும் பேச்சுக்காரி

**ஆண்:** சாந்துப் பொட்டுக்காரி
சலசலக்கும் பேச்சுக்காரி
சாடைப் பேச்சிலேயே
சந்திரனைச் சாய்க்கிறியே!

**பெண்:** மூக்கு முழியழகா
முத்தான பல்லழகா!
முட்டாசு கண்ணவச்சு
என்னைச் சாய்க்கிறியே!

**ஆண்:** ஆளவட்டம் போடும்
ஆழ்கடல் முத்தழகே
பேதம் பாக்காம
பேச்சிலே கவுக்கிறியே!

**பெண்:** சுள்ளுனு சிரிக்கிற
சொக்கவைக்கும் மன்மதனே!
சுருக்காபா பேசியென்ன
மாங்கல்யம் மாட்டினியே!

**ஆண்:** எருக்கம் பூவழகி
என்னோட நேத்திரமே
கருக்களில் பூத்திருக்கும்
கலையான செண்பகமே!

**பெண்:** இருட்டச் சிறைபுடிச்ச
என்னோட ராசாவே!
உனக்காக பூத்திருக்கா
உன்னோட மாங்குயிலே!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# கண்ணாளனே!

மறைந்திருந்து பார்த்தாயே
மர்மத்துடன் பேசினாயே
மன்னவனே மனதினிய கண்ணாளனே

மகளான எனையுமே
மனையாளாக்கினாயே
மணியாக ஆட்டிவைத்தாயே

மனக் கோவிலிலே குடிவந்தாயே
மஞ்சள்கயிறு சூட்டினாயே
மகிழ்ச்சிதனை பெருக்கினாயே

மழலைச்செல்வமும் கொடுத்தாயே
மலையன்பையும் பொழிந்தாயே
மடலெழுதி தந்தாயே

மரியாதைக்குரியவனே
மல்லிகை மணவாளனே
மரிக்கொழுந்து வாசமுள்ளவனே

மண்ணில் வாழும் நாளிலேயே
மதியோடு சுதியாக உன்னோடே
மரணம்கூட உன்மடியினிலே

மன்றாடுவேனே இறைவிடமே
மல்லுக்கட்டி நிற்பேனே!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# சேமிப்பு

சேமிப்பும் ஒரு கலையே!
வாழ்க்கை தத்துவங்களில்
முக்கிய பங்கு சேமிப்பே !

எதிர்காலத் தே இன்னலுரும்போது
கை தூக்கி கொடுப்பது சேமிப்பே !
எதிர்கால தேவைக்கு இன்றே சேமிப்போம்!



தேனீக்களின் சேமிப்பு மதுரமான தேனே!
எறும்புகளே தானியங்களை
சேமித்து வைத்து உண்கிறதே!

சிறு வயதிலேயே மண் உண்டியலில்
காசு சேர்த்து வைக்கும் பழக்கம்.
உண்டியலை ஆட்ட, ஆட்ட கலகலவென்று சப்தம்
நம்மை மகிழ்ச்சி பொங்க வைக்கும்.
உற்சாகமும் பெருகுமே!

இது அக்கால சேமிப்பு!
தற்காலத்தில் அரசாங்கம்
பல வழிகளில் சேமிப்பை
வலியுறுத்தி வருகின்றனவே!

எதிர்கால வாழ்வு சிறக்கவே!
சேமிப்போமே!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மாயாவின் நினைவில்

எங்கிருந்தோ என்வீட்டை வந்தடைந்தாள் உன் அன்னை!
இரண்டாவது பிரசவத்தில் ஈன்றெடுத்தாள் உன்னை!
உன்னுடன் பிறந்தவைகளை கடித்தது பூனையொன்று!
ஓடிவந்து நான்விரட்ட உயிர்பிழைத்தாய் நீயன்று!
எங்களின் உலகத்தில் உனக்கொரு இடமுண்டு!
நாங்களே உலகமென்று வாழ்ந்திருந்தாய் நீயிங்கு!
இருபதுக்கும் மேற்பட்ட குட்டிகளை ஈன்றெடுத்து
ஒருகுறையும் இல்லாமல் தாயன்பை அளித்திட்டாய்!
மாயமாய் ஒருநொடியில் எங்கோநீ ஓடினாலும்
மாயாவென நானழைக்க மாடிவழியே வந்திடுவாய்!
நாய்களிடமிருந்து உனைக்காக்க வலைபோட்டு வைத்திருந்தோம்!
விதியின் விளையாட்டால் ஒருநொடியில் நள்ளிரவில்
இருபத்து ஆறன்று மாய்ந்துவிட்டாய் நாய்களினால்!
ஆறுநாய்கள் கடித்தால் யார்தான் என்செய்வர்?
உன்னை அந்தக் கோலத்தில் கண்டவுடன்
என்னுள்ளம் துடித்தது! ஏனிந்த முடிவென்று?
என்குரல் கேட்டவுடன் எங்கிருந்தாலும் ஓடிவருவாய்!
இனிமேல் நானழைத்தாலும் வரமாட்டாய் நீயிங்கு!
வாயிற்கதவை திறக்கையிலே மாயாவின் ஞாபகங்கள்!
நீயே எங்கும் இருப்பதுபோல் ஒருணர்வு!
துயிலெழுப்பும் உன்னழைப்பு ஐந்தரை மணியளவில்!
உந்தன் தனித்துவக் குரலை இனிகேட்க வழியில்லை!
மாயா — நீ பூனை அல்ல! நான்மறவா நிழல்!
மறைந்து விட்டாலும் உள்ளத்தின் ஓரத்தில்
நிரந்தரமாய் நின்றிருப்பாய்! உன்னுடைய ஆன்மா
இறையருளால் சாந்தியடைய வேண்டுகிறேன் இறைவனிடம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# தடைகளைத் தகர்ப்போம்

சின்ன சின்ன சவால்களில்
நம்முள் இருக்கும் நம்பிக்கை
வெற்றி வழியில் இட்டுச் செல்லும்!
வெற்று கனவுகளை வெற்றியாய்
மாற்றிடும் நம் சிந்தனை!
நாம் விழுந்தாலும்
நம் கனவுகள் சிதையாது
சிறகு முளைத்து வானில் பறக்கும்!
முடியாது என்பதே மாயை தான்
முயற்சி செய்தால் போதுமே!
நம் முடிவை நாமே நிர்ணயிக்க
விதியை மதியால் வெல்ல முடியுமே!
தடைகள் வந்தால் பயப்பட மாட்டோம்
அதைத் தகர்த்து
உடைத்தெறிவோம் நாமே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# உயிரின் வழித்தடங்களில்!

உறவுகள் சில உயிரில்லாதது
நினைவுகள் பல நிலையில்லாதது
திறமைகள் சில உருவழிந்தது
கனவுகள் பல நனவாகதது

கவிகள் சில உயிரடைகிறது
கதைகள் பல நிஜமாகிறது
கண்கள் மனதின் கண்ணாடி
கவர்வதும் கவிழ்ப்பதும் கயல்விழியன்றோ!

வார்த்தையில் வலிமையில்லை
வாழ்விலும் நிஜமில்லை
வீழ்ந்தால் மகிழும் மனங்கள்
வாழ்ந்தால் வலியால் துடிக்கின்றனவே!

ஆதாம் ஏவாள் இல்லா
ஏதேன் தோட்டம் எங்கே?
வஞ்சனையில்லா வாழ்வியல் எங்கே?
கலங்கமில்லா உவகை எங்கே?

பழிபோடும் மனமில்லா வாழ்வு
எதிர்கால பயமற்ற வாழ்வு
காரணமின்றி கவலையுறும் மனம்
நல்வாழ்வுக்கு வழி காணனுமே!

உயிரின் காலம் சிறிதே
உதவும் மனம் பெரிதாகனுமே
உள்ளம் உழலாது களிக்கனுமே
உறுதியாய் முன்னேறி வாழனுமே!

நட்புகள் சில நங்கூரமானது
நாட்கள் கடந்தும் வாழுமே
பெயரற்ற உறவுகள் தானே
பெயர் சொல்ல உதவுகிறது!



கவிஞர் செல்வக்குமரன் சுரேஷ்குமார், சீனா

# வாசிப்பற்ற நாட்கள்

உனை தீண்டாத
நாட்களை நகர்த்துவது
எளிதல்ல
புரிந்தும் சில பொழுதுகள்
எதையோ தேடியே

கண்களை தேடலுக்குள்
நுழைத்து
தீராத தாகத்திற்கு
தீனிதேடும் மனம்

உலர்ந்த நாவும்
உயிர் தொலைத்த
நிமிடங்களும்

ஒற்றைப் பக்கமேனும்
உணர்ந்து புரட்டிவிட
துடிக்கும் இம்சை

அழகான இம்சைதான்
தேகம் பாடும் பாடலொன்றை
மறந்த நிலைக்குள்

வாசிப்பற்ற
பொழுதுகளை
அள்ளிச் சேர்க்க
மனமின்றியே
தள்ளி வைத்து எட்டி நிற்கிறேன்



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டிணம்)

# நானும் கடவுளும்

நேர்த்திக்கடன்
செலுத்தியதில்லை
திசைகள் பார்த்து
வணங்கியதில்லை
பார்ப்பதற்கு கால் கடுக்க
நடந்ததில்லை

விளக்கு
ஏற்றும் போது மட்டும்
சுட்டு விடக்கூடாது என்று
கடவுளை சற்று
நகர்த்தி வைக்கிறேன்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# உயிரான உறவுகள்

அன்பான இதயத்தில்
"அலைகளாய்" ஆர்ப்பரிக்கும்
நேசம் என்னும் பாசக் கூடு அது
உறவுவளர்க்கும் உயிர் கூடு.

உண்மைக்கு குரல் கொடுத்து
உறவுக்கு கை கொடுத்து
அன்பு  நட்பு பாசம் என்னும்
அற்புத நேசமே
"உயிரான உறவுக்கு"
உயிர் கொடுக்கும் உண்மையே.

பாசம் என்னும் ஓர் நிலை
உயிர்களிடத்தில் வேண்டுமே
உறவு போற்றும் வாழ்வு என்றும்
"இனிமை சேர்ந்த நேசமே"!

புகழ்கல்வி ஆற்றலும்
அறிவான நன்மக்கள்
நோயில்லாஉடலும்
நலமான வாழ்வை
உயிராய் போற்றும் உறவும்
காலத்தை வெல்லும் சக்தியே!



கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# ஆணவப்படுகொலை

ஆனமட்டும் பேசி தீர்த்தோம்
ஆற்றாமையை எழுதி எழுதி மாய்ந்து போனோம்
ஆனால் குருதியை குடிக்கும்
ஆணவக்கொலைக்கு தீர்வில்லை
ஆளுங்கட்சி உயிருக்கு விலைபேச
ஆதரவுகரம் நீட்டும் எதிர்கட்சி

சாதிகள் இல்லையடி பாப்பா
கற்றுக்கொடுத்த கல்வியும்
சாதியை வைத்தே இட ஒதுக்கீட்டை
முடிவு செய்யுமெனில் ஏட்டுகல்வி படிக்க மட்டுமா
வாழ்வில் செயல்படுத்த அனுமதிக்காத சமூகம்

ஒரே சாதியிலும் பணத்தை வைத்தே
மதிப்பிடும் மக்களின் தராதரம்

கல்வியே மனிதனை சீர்படுத்துமெனில்
கல்விநிலையங்களில் மதிப்பெண் வைத்து மட்டுமே
அரசுபணிகளை வழங்கவேண்டுமல்லவா
அதிலும் சாதியை குறிப்பிட்டே பணிவழங்கல்

சாதியை வைத்தே அரசியல் சாக்கடை
அதில் ஊறியவன் எப்படி
இதற்கெல்லாம் தீர்வுகளை ஆய்வான்
எல்லாமே வெறும் கண்துடைப்பு

இன்னும் எத்தனை படுகொலைகள் நடப்பினும்
சாதியின் வேரறுப்பது சாத்தியமில்லை!



கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

# உணர்வாய் நீ

தென்றலாய் வந்து
உணர்வில் கலந்து
உயிராகி போவாயோ?

மின்னலாய் வந்து
என்னை திறப்பாயோ
கண்ணாகி கருமணியாய் காப்பாயோ?

மேகமாய் கூடி
மழையென தூவிச்செல்வாயோ?
பருத்தியாய் படர்ந்த
அடர்ந்து வெடித்திடும் பாசம் தாராயோ?

அடர் இருள் போக்கும்
வெளிச்சக்கீற்றாய்
நீயும் ஆகுவாயோ?

நெஞ்சமும் கொஞ்சமும் அஞ்சாமல்
உன்னை கொஞ்சுமோ கொஞ்சுமோ

பாசமே பஞ்சமில்லை
அன்புக்கு எல்லையில்லை
நேசம் நீள
நீயே நானே நாமே காதலென

இம்மைக்கடந்து
சொர்க்கத்தில் சேர்ந்து
வாழவேண்டுமே



கவிஞர் சஹ்னாஸ் பேகம்

# தனிமை இனிமை



தனிமை இனிமைதான்
பள்ளிப் பருவ நினைவுகளை
அசைபோடயிலே!

தனிமை இனிமைதான்
முயன்று முன்னேறிய
நாட்களை நினைந்திட!

தனிமை இனிமைதான்
மழலைச் செல்வத்தைப்
பெற்றெடுத்த தருணமதை
எண்ணுகையில்!

தனிமை இனிமைதான்
பிறரிடம் அன்பும் அரவணைப்பும்
கிடைக்கப் பெற்றதை எண்ணி
அக மகிழ்ந்திடும் போது!

தனிமை இனிமைதான்
தன் மக்களிடம்
தோற்றாற் போல் நடித்து
புன்முறுவல் புரியும் நேரந்தனிலே!

தனிமை இனிமைதான்
ஊடலும் கூடலாய் மாறி
மகிழ்ந்த நேசமதை நினைக்கையிலே!

தனிமை இனிமைதான்
தன்னால் பிறர் பெற்ற உதவியால்
நலமுற்று வாழ்வதை காண்கையிலே!

சிற்சில தருணங்களில்
தனிமையும் இனிமைதான்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# படைப்பின் பாதை



படைப்பினுள்
எத்தனைப் படைப்புகள்.
அந்தப் படைப்புகளுள்
எத்தனைப் படைப்பாளிகள்.
படைப்பை அறிந்து
கொள்ளும் கண்களும்
படைப்பை வாசித்து விடுகின்ற
இதழ்களும்
பதிவு செய்து கொள்கின்ற மனங்களும்
ஆஹா! .ஆஹா!
நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம்!
படைப்புகளுள்
மூழ்காதவர்கள்
படைக்கப்பட்டதன்
அர்த்தம்தான் என்ன?
நாம் அனைவரும் படைக்கப்பட்டவர்கள்!
நம்மால் படைக்க வேண்டியவைகள்
பல்லாயிரங்கள்.
அவை சொற்களாக இருக்கலாம்
செயல்களாக இருக்கலாம்
பொருளாக இருக்கலாம்
உணர்வாக இருக்கலாம்
உயிராக இருக்கலாம்
பிரம்மன் மாத்திரமா
படைக்க வேண்டும்.
பிறந்தவர்கள் எல்லோரும்
படைக்க வேண்டும்
காலத்துக்கேற்ற படிப்பும்
காலத்துக்கேற்ற படைப்பும்
இன்னொரு படைப்புலகத்துக்கு
வழிகாட்டியாகிவிடும்.
ஆகவே
படைப்பின் பாதையில் பயணிப்போம்.

கவிஞர் சோ. ஸ்ரீதரன்

**உணர்வுகளின் உரிமையளாராய்**

செயல் திறமைக்கு
வெகுமதியாய் 'வெற்றி'
கொண்டாடப்படும்
உணர்வாய் 'உவகை'

எதிர்பார்ப்பின்
விளைவாய் 'ஏமாற்றம்'
அனுபவிக்கும்
உணர்வாய் 'ஏக்கம்'

சரியான திட்டமிடலுக்கு
வெகுமதியாய் 'பணி முடித்தல்'
அனுபவிக்கும் உணர்வாய் 'நிம்மதி'

நேரத்தில் செய்த உதவிக்கு
கொடுக்கப்படும் 'பாராட்டு'
அனுபவிக்கும் உணர்வாய் 'திருப்தி'

இந்த உணர்வுகளுக்கு
உரிமையளாராய் 'மனது'.
***

**இதுக்கு அதுமேல்**

நீண்டு கொண்டே போகின்ற
முடிவுக்கான காத்திருப்பில்
தோல்வி மேல்



கேட்டுக் கொண்டே
இருக்கின்ற உதவிக்கு
பார்க்கிறேன் என்பதற்கு
முடியாது என்று சொல்வது மேல்

உழைப்பையும் அர்ப்பணிப்பையும்
கொடுத்துக் கொண்டே இருந்தும்
கண்டு கொள்ளாமல் இருக்கையில்
வெளியேறுவது மேல்

உண்மையே இல்லாமல்
நேரிடையாயும் பிறரிடத்தும்
விமர்சிக்கப்படுகையில்
சேர்ந்து இருப்பதற்கு
ஒதுங்குவது மேல்

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை



இருக்கும் போதும் சரி
இறந்த பின்னும் சரி
காய்ந்த பூவை
ஒதுக்கி கொண்டே இருக்கிறாள்
பாட்டி
***

கர்ஜனை :
எதிரொலியை
எதிர்பார்ப்பதில்லை
சிங்கம்
***

இலகுவாக செல்வதெல்லாம்
இலக்கு அல்ல
என்றறிக
***

நேரமின்மையால் கூட
சாதி ஒழிய
வாய்ப்புள்ளது
***

கோடான கோடி மக்கள் இருந்தாலும்
ஒவ்வொருவருக்கும் தனியாக உடனிருக்கிறான் அல்லாஹ்
என்ற அளப்பரிய நம்பிக்கை தான் ஆன்மீகம்
***

மாட்டு வண்டியை
சொகுசு வாகனங்களில்
சேர்க்க வேண்டும்
***

தேவை இல்லாத ஆப் கள்
ஆண்ட்ராய்டின்
ஆப்புகள்
***

பாரதியார் மீதுள்ள
மரியாதை நிமித்தமாக
பாரதி தாசன் மீசையை
குறுக்கி கொண்டார் போலும்
***

5 நிமிடத்தில் தாஜ் மஹாலை
வரைந்து விட்டது குழந்தை
யாரும் ஒப்புகொள்வதை பற்றின
கவலை இல்லை அதற்கு

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

# முகவரி தேடும் காற்று

## கீழே விழுந்தாள் பூனம்

## அத்தியாயம் 22

(புதினம்)



அரசு அங்கு வந்த போது அந்த நிகழ்ச்சி கொஞ்சம் கூட எதிர்பார்க்க வில்லை.

அரசு உள்ளே வருகிறான் என்று தெரிந்தத்தும் வேக வேகமாக ஓடிவந்து அவனை எதிர் பாராததுபோல (நடித்து) கீழே விழுந்தாள் பூனம்.

பூனத்தைத் தூக்கி மெதுவாக நாற்காலியில் அமர்த்தி பாட்டிலில் இருந்த குளிர் நீரை எடுத்து அவள் முகத்தில் அடித்து விட்டு அவள் வாயில் குடிக்கவும் கொடுத்தான்.

அவள் மயக்கம் தெளிந்து எழுவதுபோல பாவ்லா செய்து கொண்டே கண்களை மெதுவாகத் திறந்து "ஹூம்.. " ஏய் அரசு எனக்கு என்னாயிற்று"? என்றாள்.

கொஞ்சம் கோபத்தோடு "உனக்கு ஒன்றும் ஆகவில்லை. பூனம் இப்படிச் செய்வதில் உனக்கு வருத்தமில்லை...? வெட்கமில்லை? யேய்ய்.. ஏதோ சாதாரண ஆண்மகனை வீழ்த்துவது போல என்னிடம் ஏன் நடந்து கொள்கிறாய்?" , "பூனம் நீ என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா என்று முதலில் கேட்டபோது விளையாடுகிறாய் என்றுதான் நினைத்தேன்."

"பூனம் இந்த விளையாட்டு எனக்குப் பிடிக்க வில்லை. எனக்குத் தேவையுமில்லை. நான் என் வீட்டை விட்டு வெளியே வந்தது இப்படி ஏதாவது ஒரு பெண்ணின் வலையில் விழுவதற்கல்ல. நீலா என்று ஒரு பெண்ணை விழுந்து விழுந்து காதலித்தேன் தெரியுமா? இன்னும் கூட அந்த வடு மாறவில்லை. என்ன சொன்னாள் தெரியுமா? பணமில்லை என்றால் காதலில்லை என்றாள். சே! என் பணத்தை காதலித்திருக்கிறாள் என்று தெரிந்து வெறுத்துபோய் விட்டேன்."

கவிஞர் இரஜகை நிலவன்

"இவன் வெற்றுப் பயல் என்று எண்ணி விட்டாள்பார்! ஒரு நாள் அவள் முன்னால் நின்று எப்படி என் தந்தையின் கையை கூட எதிர் பார்க்காமல் இப்படி வளர்ந்திருக்கிறேன் என்று சொல்ல அவள் பார்த்து வெட்கப்பட வேண்டும்."

''பூனம் உன்னுடைய வயது, திருமணம் முடிந்த உடனே கணவனை இழந்து நிற்கும் பாங்கு ... ஒரு இளம் ஆண்மகன் மேல் , அதுவும் ரொம்ப ஜாலியாக எதற்கும் மசியாத முரட்டு பிடிவாதம் கொண்ட ஆணை பார்த்தும் இந்த மாதிரி பிரச்சினைகளை எதிர் கொள்ளத்தான் சொல்லும். அதற்காக இப்படியா? தயவு செய்து என்னை எதிர் பார்க்காதே."

"எனக்கு என் தந்தையின் வியாபார சாம்ராஜ்யத்தை விட நான் பெரிய ஒரு பிசினஸ் மேக்னட்டாக மாற வேண்டும். அதற்கு இந்த மாதிரி சின்னச் சின்னப் பிரச்சினைகள் எல்லாம் வரும் போது கண்டிப்பாக எனக்கு ஏறும் படிகள் இறங்கு முகமாக இடையூறுதான் ஏற்படுத்தும்."

"என்ன பூனம் எதுவும் பேசாமலிருந்தால் என்ன அர்த்தம். உன் அண்ணன் திலக் உனக்கு நல்ல வரன் பார்த்துக் கொண்டிருக்கிறான். புதியதாக வரும் உன் கணவனுக்கு இப்படி ஒரு சில கெட்ட செய்திகள் கூட போய்ச் சேர வேண்டாமே." என்ற அரசுவின் கயைப் பிடித்துக் கல கலவென்று சிரித்தாள் பூனம்.

'இவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா' என்று அரசு யோசித்தபோது "போங்க அரசு. எனக்கு இந்த கல்யாணம் கத்தரிக்காய் எல்லாம் வெறுப்புத் தட்டி விட்டது. உங்களுக்கு ஒன்று தெரியுமா? எனக்கு சனி நடக்குதாம். எத்தனைத் திருமணம் முடித்தாலும் கணவன் ஒரு மாதத்திற்குள் பரலோகம் போய் விடுவானாம்."
"பாவம் இன்னும் திருமணம் செய்து வருகின்ற பாக்கியவானை ஏன் கொல்ல வேண்டும் போப்பா, உங்கள் கல்யாணமும்... கருமாதியும்..." திரும்பவும் சிரித்தாள் பூனம்.

# முகவரி தேடும் காற்று

## கீழே விழுந்தாள் பூனம்

## அத்தியாயம் 22

(புதினம்)

"என்ன பூனம் இவ்வளவு பெரிய பைத்தியக் காரியாக இருக்கிறாய். நாம் 21 ம் நூற்றாண்டிலும் 22ம் நூற்றாண்டையும் தாண்ட முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த காலகட்டத்தில் சுக்கிர தசை செவ்வாய் தோஷம் எல்லாம் சொல்லிக்கொண்டு... சாத்திரமாவது சாக்கடையாவது.. முதலில் இந்த ஜோசியம் பார்க்கும் விஷயங்களை முதலில் தூக்கி எறி. நல்ல ஒரு ஆண்மகனை திருமணம் செய்துகொள்."

"உங்களுக்கு தெரியாது அரசு. என் வாழ்க்கையில் ஜோசியர் சொன்ன மாதிரி பல விஷயங்கள் நடந்து விட்டது. அந்த அமெரிக்க மாப்பிள்ளை வேண்டாம் நீ விதவையாகி விடுவாய் என்று எவ்வளவோ சொன்ன பிறகும் கேட்காமல் என் அண்ணா திலக் தான் திருமண ஏற்பாடுகள் எல்லாம் செய்தான். கடைசியில் என்னாயிற்று பார்த்தாயா? நீ நம்பாமல் போகலாம் ஆனால் எனக்கு இதுதான் வாழ்க்கை. இன்னொரு ஆண்மகனை வீணாக கொல்ல விரும்ப வில்லை."

"ஸாரி, நான் நடந்து கொண்ட முறை சரியில்லாமல் போயிருந்தால் மன்னித்துக்கொள். இனிமேல் உன் வழிக்கே வர மாட்டேன்." கண்ணீர் மல்க ஓடினாள்.

ஓடிப்போன பூனத்தையே பார்த்து கொண்டிருந்த அரசு தலையை உலுப்பி கொண்ட போது மொபைல் போன் கூவியது.



தொடரும்...

கவிஞர் இரஜகை நிலவன்

# இரா. இராகவனார்





**பிறப்பு**

**தமிழ்நாட்டில் சிவகங்கை நகருக்கு அருகில் உள்ள தென்னவராயன் புதுக்கோட்டையில் 1870 — செப்டம்பர் -20 ஆம் நாள் இரா. இராகவையங்கார் பிறந்தார். இராமானுசையங்காரும் பதுமாசனி அம்மையாரும் இவர்தம் பெற்றோர் ஆவர்.**

**தமிழாசிரியப் பணி**

**1888-ஆம் ஆண்டில் தன்னுடைய 18-ஆம் அகவை ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணி. இங்குப் பணியாற்றும் பொழுது சானகி அம்மாள் என்பவரோடு திருமணம். இவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகளும் இராமானுசையங்கார் என்னும் மகனும் பிறந்தனர்.**

**சேது சமத்தான அரசவைப்புலவர்**

**இராமநாதபுர சேதுசமத்தானத்தான அரசராக இருந்த பாசுகரசேதுபதி, தன்னுடைய அரசவையின் தலைமைப் புலவராக இரா. இராகவையங்காரை நியமித்தார். இவர் அரசவைப்புலவராக இருந்த காலத்தில் அந்த அரசவைக்கு வருகைவந்த தமிழ்ப் புலவர்கள், வடமொழிப் புலவர்கள், இசைக்கலைஞர்கள், விவேகானந்தர் உள்ளிட்ட பல்வேறு சமய விற்பன்னர்கள் ஆகியோருடன் கலந்துரையாடினார்; தன்னுடைய அறிவுத்திறனை வெளிப்படுத்தினார்.**

**மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்**

**1901 — செப்டம்பர் — 14ஆம் நாள், பாலவநத்தம் நிலக்கிழார் பாண்டித்துரைத் தேவரின் முயற்சியால் பாசுகர சேதுபதியின் ஆதரவோடு,**

கவிஞர் திரு.அ.வில்சன், இதழாசிரியர்

# இரா. இராகவனார்

கட்டுரை

### மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

1901 — செப்டம்பர் — 14ஆம் நாள், பாலவநத்தம் நிலக்கிழார் பாண்டித்துரைத் தேவரின் முயற்சியால் பாசுகர சேதுபதியின் ஆதரவோடு, மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இச்சங்கத்திலிருந்து தமிழ்ப்பணி புரிய இரா. இராகவையங்காரை பாசுகரசேதுபதி அனுப்பி வைத்தார். அச்சங்கத்தின் நூற்பதிப்பு, ஆராய்ச்சி ஆகிய துறைகளின் தலைவராக இரா. இராகவையங்கார் பொறுப்பேற்றார். அப்பொழுது பல இடங்களுக்கும் சென்று பழஞ்சுவடிகளைத் திரட்டினார். அவற்றை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பாண்டியன் நூலகத்தில் தொகுத்து வைத்தார்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில்

1935-ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழாராய்ச்சித் துறை உருவாக்கப்பட்டது. அத்துறையின் முதன்மை ஆராய்ச்சியாளராக 1935-ஆம் ஆண்டு முதல் 1941-ஆம் ஆண்டுவரை பதவி வகித்தார். அப்பொழுது தமிழிலக்கிய, இலக்கண ஆய்வில் ஈடுபட்டதோடு முதுகலை மாணவர்களுக்குத் தமிழிலக்கியத்தைக் கற்பித்தார்.

### இறுதிக்காலம்

1941-ஆம் ஆண்டில் அண்ணாமலை பல்கலைக் கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர், இராமநாதபுரத்தில் உள்ள தன்னுடைய மாளிகையில் தன்னுடைய இறுதிக் காலத்தைக் கழித்தார். கண்பார்வை மங்கிய பின்னர், மற்ற இடங்களுக்குச் சென்று சொற்பொழிவாற்றுவதைக் கைவிட்டார். தன்னை நாடிவருபவர்களுக்கு மட்டும் தமிழ் கற்பித்து வந்தார். 1946 — சூலை — 11-ஆம் நாள் மரணமடைந்தார்.

கவிஞர் திரு.அ.வில்சன், இதழாசிரியர்

## இயற்றிய நூல்கள் [தொகு]

| வ.எண் | மு.பதிப்பு ஆண்டு | நூல் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 1917 | வஞ்சிமாநகர் | ஆய்வுரை |
| 2 | 1924 | சேதுநாடும் தமிழும் | மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 13 ஆண்டுக் கூட்டத்தில் படிக்கப்பட்டது |
| 3 | 1927 | புவி எழுபது | செய்யுள் நூல் |
| 4 | 1932 | தொழிற்சிறப்பு | செய்யுள் நூல் |
| 5 | 1933 | திருவடிமாலை | செய்யுள் நூல் |
| 6 | 1933 | நல்லிசைப் புலமை மெல்லியர்கள் | ஆய்வு நூல் |
| 7 | 1934 | அண்டகோள மெய்ப்பொருள் | ஆய்வு நூல் |
| 8 | | நன்றியில் திரு | செய்யுள் நூல் |
| 9 | 1937 | பாரிகாதை | செய்யுள் நூல் |
| 10 | 1938 | அபிசஞான சாகுந்தலம் | வடமொழியிலிருந்து பெயர்க்கப்பட்ட நூல் |
| 11 | 1941 | தமிழ் வரலாறு | |
| 12 | 1949 | தித்தன் | ஆய்வு நூல் |
| 13 | 1951 | கோசர் | ஆய்வு நூல் |
| 14 | 1983 | இராசராசேசுவரசேதுபதி ஒருதுறைக் கோவை | செய்யுள் நூல் |
| 15 | 1985 | ஆத்திசூடி உரை | |
| 16 | 1987 | ஆராய்ச்சிக் கட்டுரைகள் | |
| 17 | 1992 | இனிய இலக்கியம் | |
| 18 | 1994 | கம்பர் | |
| 19 | 1994 | செந்தமிழ் இன்பம் | |
| 20 | 1994 | தமிழக குறுநில வேந்தர்கள் | |

## பதிப்பித்த நூல்கள் [தொகு]

| வ.எண் | மு.பதிப்பு ஆண்டு | நூல் |
|---|---|---|
| 1 | 1901 | அகநானூறு |
| 2 | 1902 | ஐந்திணை ஐம்பது உரை |
| 3 | 1902 | கனாநூல் |
| 4 | 1903 | வளையாபதிச் செய்யுட்கள் |
| 5 | 1903 | மதுரைத் தமிழ்ச் சங்கத்து புலவராற்றுப்படை |
| 6 | 1903 | இனியவை நாற்பது மூலமும் உரையும் |
| 7 | 1903 | நேமிநாதம் மூலமும் உரையும் |
| 8 | 1904 | திருநூற்றந்தாதி மூலமும் உரையும் |
| 9 | 1904 | திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும் |
| 10 | 1904 | பன்னிரு பாட்டியல் |
| 11 | 1904 | நான்மணிக்கடிகை |
| 12 | 1905 | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் மூலம் |
| 13 | 1917 | தொல்காப்பியச் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை |
| 14 | 1946 | குறுந்தொகை விளக்கம் |
| 15 | 1949 | பெரும்பாணாற்றுப்படை |
| 16 | 1951 | பட்டினப்பாலை |



நாளை

# நமதே

முயற்சி உடையவனுக்கு

எட்டு திசையும்

ஏற்ற திசை தான்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com